

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மத்திய ஒன்றிய பிரதிநிதி கலையரசி கிரிதரன், திருவள்ளூர் நகர மன்ற உறுப்பினர் பரசுராமன் இந்திரா ஆகியோர் இல்ல விழாவில் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். உடன் மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிடபக்தன், ஒன்றிய செயலாளர் பிரகாஷ்ஞானஒளி, நிர்வாகிகள் மாஸ்டர் குருதாஸ், சி.ஜெயபாரதி, எஸ்.மகாலிங்கம், டி.மோதிலால், சித்திக் அலி, மெய்யழகன், ஏ.எஸ்.மணி, பெருமாள், எம்.தியாகு, எஸ்.சரத், எம்.பிரசாத், ஜி.ஸ்ரீதர், கிளைச் செயலாளர் டி.ராஜன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்திய

# அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கக் கோரி தாம்பரத்தில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

தாம்பரம், ஜூலை 1-

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்திய த.வெ.க. அமைச்சர் - தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் கில்லி சரத் என்கிற சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி, தாம்பரத்தில் இன்று மாலை நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் - இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணியினர் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வரும்படி மாவட்டச்செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாட்டில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தற்குறி அரசாங்கத்தில் எங்களுடைய மாவட்டத்தில் உள்ள தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் த.வெ.க. சார்பில் வேட்பாளராக கில்லி சரத் என்கிற சரத்குமார் என்பவர் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சாராகவும் ஆகி உள்ளார்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தாம்பரம் தொகுதியில் நின்ற த.வெ.க. வேட்பாளரின் நிலையை பற்றி மக்கள் ஏதும் அறியாமல் அவசர கோலத்தில் தாம்பரம் சட்டமன்றத் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தன் பலனை தொகுதி மக்கள் அனைவரும் இன்று அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டின் மனித வளத்தை காக்க நியமனம் செய்யபப்ட்டுள்ள மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தாம்பரம் கில்லி சரத் பொது இடத்தில் போதைப் பொருள் உபயோகப்படுத்திய லட்சணம் இன்றைக்கு சமூக வலைத்தளங்களில் சிரிப்பாய் சிரிக்கிறது.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு தான் தமிழ்நாட்டில் போதை கலாச்சாரத்தை ஒழிக்க மாவட்டங்கள் தோறும் மராத்தான் ஓட்டப்பந்தயம் நடத்தி விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்கப்பட்டது.

சென்னையில் முதல்வர் விஜய் போதை ஒழிப்பு உறுதிமொழியை வாசித்து மராத்தான் ஓட்டப்பயணத்தில் ஓடினார்.

தன்னுடைய அமைச்சரவையில் இருக்கும் ஒரு அமைச்சரே போதைப் பழக்கத்திற்கு ஆளாகியுள்ள நிலையில் அவருக்கு அறிவுரை சொல்ல இயலாத ரீல்ஸ் ஆட்சி நடத்தும் முதல்வர் விஜய் அவர்கள் போதை ஒழிப்பிற்காக மராத்தான் ஓட்டப்பந்தயம் நடத்தி என்ன பலன்?

தமிழ்நாட்டில் போதை கலாச்சாரத்தை ஒழிப்பேன் என்று மார்தட்டி வீரவசனம் பேசும் வெற்று முதல்வர் விஜய் அவர்கள் முதலில் இதற்கு பதில் சொல்லட்டும்?

முதலில் அந்த அமைச்சரை பதவி நீக்கம் செய்து நடவடிக்கை எடுங்கள், அப்போது தான் மக்கள் உங்களை நம்புவார்கள்.

தமிழ்நாடு முழுவதும் அமைச்சர் கில்லி சரத்தை பதவி நீக்கம் செய்யக் கோரி மாவட்டங்கள் தோறும் தி.மு.க. மாணவர் அணி சார்பில் கண்டன போராட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.



அக்கண்டனப் போராட்டத்தின் நிறைவாக அந்த போதை அமைச்சரை தேர்ந்தெடுத்த தாம்பரம் தொகுதி மக்கள் அனவைரும் அறிய வேண்டும் என்பதற்காகவும், அவரை உடனே அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வலியுறுத்தியும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி - இளைஞர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று 1.7.2026 புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலையில் மாநகரச் செயலாளர் எஸ்.ராஜா அவர்கள் தலைமையிலும்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரையிலும்,

மாவட்ட - மாநகர மாணவர் அணி - இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

நிறைவாக தாம்பரத்தில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை கழக மாணவர் அணி செயலாளர் திருமதி.வீரமணி ஜெயக்குமார் அவர்கள் முடித்து வைத்து கண்டன உரையாற்றுகிறார்.

தாம்பரத்தில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பது "நமது கடமை""நமது உரிமை" என்ற அந்த லட்சிய உணர்வோடு மாவட்டம் முழுவதிலும் இருந்தும் கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு வந்து கண்டன முழுக்கங்களை எழுச்சியுடன் எழுப்பிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இளைஞர் அணியினரும் - மாணவர் அணியினரும் மாவட்டம் முழுவதிலும் உள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - சிற்றூர்களில் இருந்து தமது கரங்களில் கழக கொடிகளையும், கண்டன பதாகைகளையும் ஏந்தி வீர முழக்கமிட்டு அணி அணியாக திரண்டு வாரீர்! வாரீர்!! என்று இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

தாம்பரத்தில் இதுவரை இது போன்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றதில்லை என்ற வரலாற்றை படைக்கின்ற வகையில், தாம்பரம் மாநகரமே திக்கு முக்காடும் வகையில் கழகத்தினரும், இளைஞர் அணியினரும், மாணவர் அணியினரும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று சரித்திர சாதனையை படைப்போம் ! வாரீர்

இவ்வாறு தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### தா.மோ.அன்பரசன் – வீரமணி ஜெயக்குமார் பங்கேற்பு!

# தாம்பரத்தில் போதை அமைச்சரைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அழைப்பு!

தாம்பரம், ஜூலை 1-

இன்று 1.7.2026 புதன்கிழமை மாலை 4 மணி அளவில் மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் எனது (எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ) தலைமையில் த.வெ.க அரசின் அமைச்சர் சரத்குமார் (எ) கில்லி சரத் பொதுவெளியில் போதை பொருள் பயன்படுத்தி போதை ஏறிய வீடியோ வெளியானதை கண்டித்தும், தூய சக்தி என்று சொல்லி ஆட்சிக்கு வந்த விஜய் தலைமையிலான அமைச்சரவை அமைச்சர் இது போன்ற ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளில் கடந்த காலங்களில் ஈடுபட்டது அம்பலமாகியுள்ளது இச்செயல் வெளியாகிய இன்று வரை அவர் மீது விஜய் நடவடிக்கை எடுக்காததை கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி இளைஞரணி இணைந்து நடத்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்,

இந்த ஆர்ப்பாட்டத்தில், மாநில மாணவரணி செயலாளர்,திருமதி வீரமணி ஜெயக்குமார் அவர்களும்,காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், தா.மோ.அன்பரசன், கண்டன உரையாற்றுகின்றனர்.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்,கோல்டு டி.பிரகாஷ், வரவேற்புரையில், மாணவரணி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முன்னிலையில், மாவட்ட துணைச் செயலாளர் இ கருணாநிதி மாநகர மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ் எஸ். இந்திரன் வே.கருணாநிதி இ.ஜோசப் அண்ணாதுரை மாநகர கழக நிர்வாகிகள் எஸ்.சேகர், வ.விஜய ரங்கன், நரேஷ்கண்ணா,சதாசிவம் த.ஜெயக்குமார், இரா.சுரேஷ், ஆர்.நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட்,ஆதிமாறன், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், க.தேவேந்திரன், R.S.சங்கர் இறுதியாக மாநகர மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.கார்த்திக்,மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி கூறுகிறார்கள்.

இவ்வாறு மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா தெரிவித்துள்ளார்.

### தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131 ‘அ’ வட்டம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் - அறுசுவை உணவு!

## வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, ஜூலை.1-

131 அ வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 131 ‘அ’ வட்டம் சார்பில் 03.07.2026 புதன்கிழமை அன்று மதியம் 1.00 மணியளவில் பாளையக்காரன் தெரு. வ.உ.சி. தெரு சந்திப்பில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி 131 ‘அ’ வட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், து.பழனி முன்னிலையில், ஜி.முனுசாமி, எஸ்.லோகநாதன், எஸ்.முரளி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற உள்ளது.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர், மயிலை த.வேலு, தியாகராயர் நகர் மேற்கு, கிழக்கு பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ள உள்ளனர்.

இதில் 131’அ’ வட்ட கழக நிர்வாகிகள் எம்.விஜயகுமார், இரா.பொன்னிவளவன், ஜெ.சீனிவாசன், ஜி.மோகன்ராஜ் ராசிமுருகன், ஏ.பக்ருதீன், திருமதி. சௌமியா, இ. சுரேஷ்குமார், எஸ்.ரவி, ஜி. மில்லர்பிரகாசம், கே.விஸ்வநாதன், இ.சத்தியா, ஆர். ராமகிருஷ்ணன், வெல்டர் எஸ்.அசோக்குமார், எல். திலகவதி, எல்.பிரியா, ஆட்டோ கன்னியப்பன், வி. சண்முகம், பி.தினேஷ் குமார், எஸ்.அசோக் குமார், கே.நசீர், கே.எச்.சந்திரமோகன், கே.சுசீலா உட்பட 131 ‘அ’ வட்ட கழக நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியை சார்ந்தவர்கள், மகளிர் அணியை சார்ந்தவர்கள் மற்றும் அனைத்து கழக உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொண்டு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 131 அ வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா முன்னிட்டு 2003 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் & அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கினர். இதில் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, ஜி.ஆர்.இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யாவிஸ்வநாதன், ஜி. முருகையன், சீ.கிருஷ்ண மூர்த்தி, டி.ராஜவேலு, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன், தினேஷ் மாணிக்கம், சீ. வி.திவான் குமார், ச.லோகநாதன், எஸ்.கணேசன், பி.எஸ்.ஆறுமுகம், எஸ்.பலராமன், பி.இளவரசு, சரண்யாசித்திரை, பி.முனுசாமி, சி.ரமேஷ், எம்.காசி, செ.ஜெயசீலன், எம்.ஜே.சுதாகர்ராவ், த.மோகன், கோ.முருகன், எம்.ராஜ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் ச. தியாகராஜன்
### ஜூலை 1 (2006)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தளகர்த்தர்களான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்

நாகை நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1965–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மின் கழக தொ.மு.ச.

# எல்.குமாரசாமி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூலை 1 -

தொ.மு.ச. தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் மூத்த உறுப்பினரும், பல்வேறு பொறுப்புகளை திறம்பட வகித்து, தொழிலாளர் நலனுக்காக தன்னலமின்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றியவருமான எல். குமாரசாமி அவர்கள் 29.06.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை மிகுந்த வேதனையுடனும் ஆழ்ந்த வருத்தத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்.குமாரசாமி அவர்கள் சங்கத்திற்கும், தொழிலாளர் இயக்கத்திற்கும் திறம்பட பணியாற்றியவர். இச்செய்தியறிந்ததும் கழகத்தினர் தொழிலாளத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த எல்.குமாரசாமி அவர்கள் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.



அன்னாரின் இறுதி ஊர்வலம் மற்றும் தகன நிகழ்வு 30.06.2026 (செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணிக்கு வேளச்சேரியில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே. தாவூது
### ஜூலை 1 (2004)



மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**